DB14-1-3-TA

# அதினால் நீங்கள் விசுவாத்தை விட்டு விலகிடாதிருப்பீர்கள் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்**: ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் இன்று, உயர்நிலை பள்ளியில் இருக்கும் போது தவறாமல் சபைக்கு சென்றுகொண்டிருந்த கிறிஸ்தவ வாலிபர்களில் 70% கல்லூரி மற்றும் பல்கலைகழகங்களில் சேர்ந்தவுடன் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு பின்னடைவை சந்திக்கின்றனர் என்று புள்ளிவிபரம் கூறுகிறது. அவர்கள் வளர்க்கப்பட்ட அந்த விசுவாசத்தை விட்டு அவர்கள் பின் வாங்க காரணம் என்ன? பல்கலைகழகத்தில் இணையும் மாணவர்கள் இன்னி அவர்கள் ஞாயிறு பள்ளியில் இருக்க அவசியமில்லை என நினைக்கின்றனர். மதசார்பற்ற பேராசிரியர்கள் கிறிஸ்தவம் எப்படி துவங்கியது என்ற கேள்வியை அவர்கள் முன் வைக்கிறார்கள். இயேசு யார். அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று நம்பமுடியுமா? வேதம் நமக்கு எப்படி கிடைத்தது, அதில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்தையும் முழுமையாக நம்பலாமா?

32% கிறிஸ்தவ மாணவர்கள் தங்களுக்கு  சமய நம்பிக்கையை குறித்த சந்தேகங்களினால் பின்மாற்றமடைந்ததாக சொல்கிறார்கள். அவர்களுடைய விசுவாசத்திற்கு எந்த அர்த்தமும் இல்லாமல் போயிற்று, பதிலளிக்க முடியாது என்று தோன்றும் வகையில் பல கேள்விகள் அவர்கள் முன்பாக இருப்பதுபோல நினைத்தார்கள்.

63% கிறிஸ்தவ இளைஞர்கள் இயேசுதான் உண்மையான தேவனுடைய ஒரே குமாரன் என்பதை விசுவாசிக்கவில்லை என்கின்றனர்.

51% இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை நம்பவில்லை என்கின்றனர்.

68% பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தில் ஒருவர் என்பதை நம்புவதில்லை என்கின்றனர்.

33 % மட்டுமே வீட்டிக்கு அடுத்ததாக சபைதான் தங்கள் வாழ்வில் மிகப்பெரிய பங்காற்றுகிறது என்கின்றனர்

ஆனா இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்று நம்புகிறேன். நான் நம்பிகொண்டிருந்த அனைத்தும் சவாலிடப்பட்ட என் கல்லூரியின் முதல் நாள் இன்னும் என் நினைவில் இருக்கிறது. எனவே நமது இந்த செய்திதொடருக்கு நான் வைத்திருக்கும் தலைப்பு “நம்முடைய மகன் மற்றும் மகள் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பு அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்ன, அவர்கள் தங்கள் விசுவாசத்தில் இடறாமல் இருக்க வேண்டும்” இந்த செய்தியானது மாணவர்களுக்கு மட்டும் என்றில்லை, கிறிஸ்துவை அறியாதவர்களோடு பணிபுரியும் ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும்.

இந்த காரியங்களை நமோடு பகிர்ந்துகொள்ள இருக்கும் இன்றைய விருந்தினர் Dr. டேரல் பாக், நமது தேசத்தில் இருக்கும் வரலாற்று இயேசுவை பற்றி எடுத்துசொல்லும் வல்லுனர்களில் ஒருவர், லூக்கா சுவிசேஷம் மற்று அப்போஸ்தலர் இரண்டையும் விளக்கும் உலக பிரசித்திபெற்ற நபராகவும் இருக்கிறார். இவர் புதிய ஏற்ப்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் பணிபுரிகிறார், சுமார் 30 புத்தகங்களை எழுதி பல தொலைக்காட்சி பேட்டிகளில் பங்குபெற்றிருக்கிறார் ABC, CNN, Fox மற்றும் டிஸ்கவரி சேனல்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இந்த கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். உங்கள் பிள்ளைகளை கல்லூரிகளுக்கு அனுப்பும் முன்பு எந்தெந்த கேள்விகளுக்கு பதில் சொல்ல தெரிந்திருக்க வேண்டும், இயேசுவின் மீதுள்ள அவர்கள் விசுவாசத்தை பற்றிகொண்டிருக்க என்ன செய்வது? அவர்களை கல்லூரி அல்லது பல்கலைகழகத்திற்கு அனுப்பும்போது அவர்களிடம் தேவனை பற்றி வேதாகமம் மற்றும் இயேசுவை பற்றி பேசக்கூடிய பேராசிரியர்கள் இருப்பார்கள். நிச்சயம் அவர்கள் சபைகளில் கேள்விப்பட்ட அதேவிதமான காரியங்களை அங்கே கேட்கப்போவதில்லை. அந்த மாதிரியான அனுபவங்களில் நீங்கள் பயிற்றுவிக்கப்ப்படும்படியாக இந்த நிகழ்ச்சியை வழங்குகிறோம், ஏனென்றால் அவர்கள் விசுவாசத்தை விடுவிலகுவதை நீங்கள் விரும்பமாட்டீர்கள்.

ஒரு வசனத்தை நீங்கள் கேட்க்கும்போது உதாரணத்திற்கு யோவான் 3:16 எடுத்துக்கொள்வோம், “தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்,” ஆல்ரைட், இது வேதத்தின் உண்மையான செய்திதானா? இது வரலாற்று உண்மைகளின் அடிப்படையில் இருக்கிறதா? இது காலப்போக்கில் ஏதாவது மாற்றத்தை அடைந்ததா, அல்லது நான்காம் நூற்றாண்டில் இதை அவர்கள் உண்டாக்கினார்களா? பலவிதமான குற்றச்சாட்டுகள் எழும்புகிறது, நாங்க உண்மையென்று நம்புகிற காரியத்தை நீங்கள் புரிந்துகொண்ட திடமான கருத்தில் உங்களை உறுதியாக நிர்க்கச்செஇதிட விரும்புகிறோம்.

என்னுடைய விருந்தினர் Dr. டேரல் பாக். ஒரு பேராசிரியர், அதோடு வரலாற்றில் இயேசுவை பற்றி அறிந்த வல்லுநர்களில் முன்னிலையில் இருப்பவர். இவர் லூக்கா சுவிசேஷம் மற்றும் அப்போஸ்தலர் புத்தகத்தில் உலகிலேயே பிரசித்திபெற்ற வல்லுனர்களில் ஒருவராவார். இவர் புதிய ஏற்ப்பாடு ஆய்வுகளின் முதன்மை பேராசிரியராக டாலாஸ் தியோலஜிகள் செமினரியில் இருக்கிறார், தொலைக்காட்சிகளிலும் தோன்றியிருக்கிறார், ABC, CNN, FOX, மற்றும் டிஸ்கவரி சேனல். எப்போதெல்லாம் விமர்சகர்களோடு உரையாடும்படியான சூழ்நிலைகள் உண்டாகும் எல்லா இடங்களிலும் டாரேல் அவர்கள் மத்தியில் ஒருவராக அமர்ந்திருப்பதை பார்க்க முடியும்.

சரி, டேரல், இன்றைக்கு நீங்க எங்களோடு இருப்பதில் சந்தோஷம். ஒரு விஷயத்திற்கு நேரடியா போகலான்னு நினைக்கிறேன், ஜனங்களோட கருத்து என்னன்னா, அதாவது, இந்த மறையியல் நற்செய்தி நூல், நேக் ஹம்மடி கண்டுபிடிப்புகள், மற்றும் பல புதிய சிறிய புத்தகங்கள் எல்லாம், நம்முடைய நம்பிக்கைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது என்கின்றனர், ஒகே. சுவிசேஷங்கள் அனைத்தும் 1900 ஆண்டுகளாக பிரசங்கிக்கப்பட்டுவருகிறது, சரியா, இது கிறிஸ்துவத்தின் ஒரு பகுதி. இப்ப புலகத்தில் வேறுசில புத்தகங்கள் இருப்பதை பார்க்கிறோம், இயேசுவை பற்றிய வேறு கருத்துகள், இதை அவர்கள் எப்படி இருக்கிறதோ அப்படியே தான் இருந்து வருகிறது என்பதை ஏற்றுக்கொள்ளலாம் என்கின்றனர். இந்த குறிப்பிட்ட சம்பிரதாயத்தை கடைபிடிக்கும் பயிற்சி எப்படி நம்முடைய காலம் வரை தொடர்ந்தது? அவர்கள் சொல்லும், பதில், நான்காம் நூற்றாண்டில் இந்த சமயத்தை சார்ந்த காரியங்களில் சில ஆதிக்க சக்திகள் இடைபட்டதால் சபையானது வேறு வழியில்லாமல் மற்ற காரியங்களை புறம்பாக தள்ளிவிட்டது, ஒகே.

அது உண்மையில்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள் அதோடு அதற்கான காரணத்தையும் சொல்லுகிறீர்கள். நீங்க சொன்ன மாதிரி, இந்த பதிப்புகள் சரியா என்று நாம ஆராய்ந்து பார்க்க வேண்டியது முக்கியம், சரி, காலங்களை குறித்து சொல்லும் பதிவுகள் இருக்கிறது, இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டு பதிவுகள், இயேசுவை பற்றி கூறுகிறது, அப்போஸ்தலர்களின் பெயர்கள், இன்னும் பல தவல்கள் இருக்கு. சில காரியம் அப்போஸ்தலர்களோடு தொடர்புடையாத இல்லை, அதுமட்டுமில்லாமல் அதில் சிலது செய்திக்கு தொடர்புடையதாகவும் இல்லை, இறையியலிலும் இல்லை, ஆனால் அது ஆதி திருச்சபையில் ஆரம்பத்திலிருந்தே இருப்பது போல தோன்றுகிறது. இறையியலானது முற்றிலும் வித்தியாசமா இருக்கு. இன்றைக்கு நீங்க எங்களுக்கு சொல்ல வேண்டியது என்னனா, ஆரம்பத்திலிருந்து வேதம் எடுத்து சொல்லும் இறையியலின் மையப்பொருள் என்ன, அதை மற்றவர்களின் கருத்துகளோடு ஒப்பிட்டு சொல்லுங்க, இதை ஆதி கால கிறிஸ்தவர்கள் ஒப்பிடும்போது அவர்கள், “இதை நாங்கள் நண்பவில்லை என்றனர்.” மற்ற புத்தகங்களை அவர்கள் அப்புறப்படுத்தினர், சரி. இப்ப இங்க என்ன நடக்குதுன்னு எங்களுக்கு சொல்றீங்களா?

**Dr. டேரல் பாக்:** சரி, நம்மிடம் இருப்பது மனமாற்றம் நடந்த முதல் 2 நூற்றாண்டுகளில் சொல்லப்பட்டு வந்த இறையியலின் மையப்பொருள். இப்ப நம்ம பார்க்கிற இந்த காரியத்தை சற்று விளக்கமாக சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். பெரும்பாலான பல்கலைகழக மாதிரியின்படி இரேனியஸ் தான் சமய சம்பிரதாயங்களின் பிதா என்கின்றனர், இதற்கு காரணம் கேணனை உருவாக்கினார் மற்றும் சம்பிரதாயங்கள் என்ற கருத்தை முன்வைத்து மற்றவைகளை புறக்கணித்து அகற்றியதால் இரண்டாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய இந்த கருத்துகள் அனைத்தும் நான்காம் நூற்றாண்டிற்குள் நுழைந்து உருவெடுத்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அது 180களில், இரேனியஸ்

**Dr. டேரல் பாக்:** இரேனியாசின் 180களில் நடந்தது. நா சில வருடத்திற்கு முன்னால என்ன செய்தேன்னா சில உபதேசங்களை புரட்டி பார்த்தேன் தேவன், இயேசுவை பற்றிய

உபதேசங்கள், இரட்சிப்பை குறித்த உபதேசங்கள், இரேனியசின் காலத்திற்கு முன்பு இருந்த எழுத்தக்கள் அனைத்தையும் ஒன்று திரட்டி சேர்த்து பார்த்தேன், சம்பிரதாயங்கள் தோன்றிய விதத்தை பார்த்தேன். அவைகளின் ஊடாக இறையியலின் மையப்பொருள் தொடர்ந்து எங்காவது ஒட்டிக்கொண்டிருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தேன். அதற்கு பிறகுதான் இறையியலின் மையப்பொருள் இருக்கிறது என்ற விவாதத்தை முன்வைத்தேன். அதை வாசித்து காண்பித்தால் சிறப்பாக இருக்குன்னு நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மகளின் பிரயோஜனதிற்காக அதை திரையில் போடலாம்.

**Dr. டேரல் பாக்:** நான் எதற்காக இப்படி செய்ய நினைக்கிறேன் என்றால் இதை நீங்கள் கேட்கும் போது, ஒரு பக்கத்தில் இது சமயத்தை சார்ந்து போல இருக்காது, இன்னொரு பக்கம் இது புதிய ஏற்ப்பாட்டின் வசனத்தை போல மாத்திரம் இருக்காது. ஆனால் புதிய ஏற்ப்பாட்டில் சொல்லப்பட்டிருக்கும் மையக்கருத்தை முன்வைப்பதாக இருந்திடும். அதனுடைய பொருள் சுருக்கம் இதுதான்னு நினைக்கிறேன்: “சிருஷ்டிப்பின் தேவன் ஒருவரே. இயேசு மனிதத்தன்மையையும் தெய்வத்துவத்தையும் கொண்டிருந்தார். அவர் மெய்யாகவே பாடுபட்டு சரீரத்தில் உயிர்த்தார். அவர் ஆராதனைக்கு பாத்திரராயிருகிறார். இரட்சிப்பு என்பது விரோதிக்கும் சக்திகளிடமிருந்து விடுதலையாவது, எனினும் அது பாவம் மற்றும் பண்ணிப்பையும் உள்ளடக்கியுள்ளது, மனுக்குலத்திடம் காணப்படும் குறை நீங்க ஒவ்வொருவரும் சிருஷ்டிகருக்கு முன்பாக நிற்கும் தகுதிய அளிக்கிறது. இந்த இரட்சிப்பானது தேவன் இஸ்ரவேலுக்கு அளித்த நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசிகள் முலம் உலகிற்கும் இஸ்ரவேலுக்கும் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தத்தை உணர்த்துகிறது. ஒரே நபராக, இயேசுகிறிஸ்து, இந்த இரட்சிப்பை அளித்திருக்கிறார், தேவனிடத்தில் ஒப்புரவாகிறதர்கான வழியை வெளிப்படுத்தியிருக்கிறார், அவரே நம் பாவத்திற்காக மரித்து அந்த வழியை ஏற்ப்படுத்தி தந்தார். உயிர்த்தெழுதலானது ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்போது அவனுக்கு முழுமையான புதிய ஆவிக்குரிய வாழ்வை அளிக்கிறது. ஆவி, ஆத்துமா, மிகவும் முக்கியமான, சரீரம். இயேசுவின் மூலம் தேவன் செய்த இந்த கிரியையை விசுவாசித்து இரட்சிக்கப்படும்போது என்றென்றைக்குமான ஆவிக்குரிய வாழ்க்கையை நமக்கு அளிக்கிறது.

ஆதிகால சம்பிரதாயங்களின் கலாசாரத்தில் இதுதான் இருந்தது அதைதான் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இருந்தாலும் சம்பிரதாயங்களை பின்பற்றும் காரியத்தில் சில குறிப்பிட்ட விஷயங்கள் அதிக ஆதிக்கம் செலுத்தியிருப்பது தெரியவருகிறது. “தேவன் சிருஷ்டிகர் அல்ல என்று சொல்லி பிரிவுகளை உண்டாக்கும் விதத்தில் சொல்வது சரியாக இருக்காது. அவர் சகலத்தை சிருஷ்டித்த தேவன், சிருச்திப்பின் துவக்கம் நன்றாக இருந்ததென்று சொல்ல முடியாது. இயேசு மற்றும் கிறிஸ்து என்று பிரித்து அவருடைய மனிதத்துவத்தையும் கிரியைகளையும் பிரித்து சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. வைதீகதன்மைபடி இயேசுவானவர், தேவனுடைய குமாரன், தேவனால் அனுப்பப்பட்டு, உண்மையாய் மாம்சத்தில் வந்தார் அதிக பாடுகள் பட்டார். மூன்றாவதாக, ஆவிக்குரிய தளத்தில் மட்டும் தான் மீட்பு உண்டாகும் எனபது விசுவாசமல்ல. இரட்சிப்பு என்பது மாம்சீக பரிமாணத்தில் உயிர்ப்பிக்கப்படுவதோடு அது இயற்க்கை படைப்புகளையும் சென்று அடைகிறது. இதற்கு அர்த்தம், நான்காவதாக, இயேசு நமக்கு விசுவாசித்தில்

பலப்படும்படியான வழியை காண்பித்து, ஒரு தீர்க்கதரிசியாக, ஞானமாய் மார்க்கத்தை போதிப்பவராக, விசுவாசத்திற்கு மாதிரியாக இருக்க வேண்டும் என்றிடாமல், மாறாக, அவருடைய கிரியைகளினால் நமக்கு இரட்சிப்பை அளித்திருக்கிறார். அவர் தீர்க்கதரிசிக்கும் மேலானவர். தேவனோடு அவருடைய குமாரனாக அவர் ஆராதனைக்கும் கனத்திற்கும் மகிமைக்கும் பாத்திரராயிருக்கிறார்.

இதுதான் முதல் இரண்டு நூற்றாண்டின் இறையியலின் மையப்பொருளாக இருந்தது முதல் இரண்டு நூற்றாண்டில் கிறிஸ்தவத்தின் சார்பாக செய்யப்பட்ட எந்த கணிசமான வெளியீடுகளை எடுத்து பார்த்தாலும் இதுதான் இருக்கும், கிறிஸ்தவத்திற்கு புறம்பான எந்த மாற்றுகருத்து உடையவர்களை பார்த்தாலும், இந்த கதையை தான் அவர்களும் சொல்ல கேட்ப்பீர்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி. இரேனியசுக்கு முன்னால 180வருடத்திற்கு முன்னால இருந்த பதிவுகளை பார்த்ததாக சொன்னேங்க அப்படின்னா நீங்க இயேசுவை பற்றி பார்த்தா சொல்றீங்களா. சுவிசேஷங்களில் அவரை பற்றிய பதிவுகள் இருக்கிறது. சுவிசேஷங்களுக்கு முன்னால எழுதப்பட்ட பவுலினுடைய நிருபங்களும் இருக்கிறது. அப்போஸ்தலர்களின் சீஷர்கள் இருந்தார்கள், பேதுரு பிரசங்கித்த போது உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தவர்கள் பவுல் பிரசங்கத்தை கேட்டிருக்கலாம், யோவானுடையதை கேட்டிருக்கலாம்.அப்படிப்பட்டவர்களின் எழுத்துகளும் இருக்கும்.

**Dr. டேரல் பாக்:** அப்போஸ்தலரில் பிரசங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அப்போஸ்தலரில் உள்ள பிரசங்கம். இதெல்லாம் நமக்கு முன்பு இருக்கிறது. புதிய ஏற்ப்பாட்டின் 27 புத்தகங்கள் என்று சொல்லப்படுவதை பார்த்தாலும் சரி, அப்போஸ்தலர்களின் சீஷர்கள் எழுதியவற்றை பார்த்தாலும் சரி, அல்லது அதற்கு பிறகு வந்த பாதிரியார்கள் எழுதியதை பார்த்தாலும், இப்ப சொன்ன எல்லாவற்றையும் அதிலே நீங்கள் நிச்சயம் பார்க்க முடியும்.

**Dr. டேரல் பாக்:** அதுதான் சரி. இந்த எல்லா உபகரணங்களிலும் இறையியலின் மையப்பொருள் தொடர்ந்து வந்துகொண்டே இருப்பதுதான் மறுக்க முடியாத விஷயம். 2 நூற்றாண்டுகளாக தொடர்ந்துகொண்டிருக்கிறது. இதே விஷயம் திரும்ப திரும்ப சொல்லப்படுவதை பார்க்க முடியும். ஒரே விஷயம் வித்தியாசமான கோணத்திலும் வித்தியாசமான விதங்களில் வெவ்வேறு வார்த்தைகளில் சொல்லப்படுகிறது. ஆனால் இதில் சொல்லப்படும் மையப்பொருள் தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் ஒரே விஷயம் தான். மத கோட்பாடுகள் எழுதப்பட்ட மொழிகளில் பிரச்சனை இல்லை என்பதை பார்க்கிறோம், ஏனென்றால் மத கோட்பாடுகள் அனைத்தும் இங்கிருந்துதான் விருத்தியாகிறது. அதனால் மொழிகளில் பிரச்சனை இல்லை, உண்மையில், புதிய ஏற்ப்பாட்டின் பகுதிகளும் இதில் அடங்கும். என்னென்றால் நாம் பார்க்கிற காரியங்கள் அனைத்தும் புதிய ஏற்ப்பாட்டின் வார்த்தை தொகுப்புகளின் பிரதிபலிப்பாகும், இவை அனைத்தும் உருபெற்று மிகப்பெரிய விஷயத்தை எடுத்து சொல்வதாக நிற்கிறது.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இன்னும் ஒருசில நிமிடங்களில் இந்த வார்த்தைகள் உண்மையாகவே அதில் இருக்கிறது என்பதை அவர்கள் காணும்படியாக சில காரியங்களை சொல்ல இருக்கிறோம். இப்ப வேறொன்றை பார்க்கலாம், சரியா. இப்ப

பல்கலைகழக வகுப்பிற்குள் ஒரு சிறு பிள்ளை வருகிறதென்று வைத்துகொள்வோம் நீங்க விமர்சன ஆசிரியர், சரியா. சரி, இப்ப, டேரல் ஒரு கிறிஸ்தவர் கிடையாது, ஆனா இந்த புத்தகங்களை வாசித்திருக்கிறார், அதனால அவருடைய கருத்துகள் வேறுபட்டதாக இருக்க நீங்க சொன்னதற்கு அவர் பதில்சொல்கிறார். அவர் எப்படி பதில் சொல்லியிருப்பார்?

**Dr. டேரல் பாக்:** சரி, நான் சொன்ன ஆலோசனைக்கு எதிராக எப்படியாவது முயற்சித்து அதற்கு சவாளிடும்படியான வழிகள் வலியுறுத்தப்படுவதாக நினைக்கிறேன். எந்த சவால்களும் சொல்லப்படும் உண்மையை மாற்றமுடியாது. அதுதான் உண்மை. இப்ப கேள்வி என்னன்னா, எத்தனை வருடங்களுக்கு பின்னால் சென்றனர்? அப்படி செய்தவை நம்மை இயேசுவிடம் கொண்டு சேர்க்கிறதா? என்ன நடக்கிறது என்பதை பற்றி நாம் பேசிய காரியத்தில் இந்த இடைவெளியை குறித்துதான் அவர்கள் வலியுறுத்துகின்றனர். அவர்களுடைய விவாதம் நாம் ஆதாரங்களை பார்க்கிறோம் என்றிருக்கும், ஆமா, அதற்கு முதல் நூற்றாண்டின் வம்சத்தின் வாசனை இருக்கும். பிற்காலத்தில் வந்தவைகள் என்று நாம் சொல்லிய சிலவற்றின் வம்சங்களின் வாசனையும் அதில் கலந்திருக்க கூடும். அதுதான் உண்மை. ஆனால் இயேசுவை சென்று அடையும்படிக்கு நாம் இன்னமும் விரல் நுனியை கூட எட்டிப்பிடிக்கவில்லை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, ஆனா இந்த இடைவெளி 20- 40 வருடங்களுக்கு தான இருந்தது. அது, மிக, பெரிய இடைவெளி என்று சொல்ல முடியாது. இன்னொரு விஷயம், ராஜ்ஜியம் முழுவதும் கிறிஸ்தவர்கள் சபைகளை ஸ்தாபித்துகொண்டிருந்தார்கள், அவர்களின் கீர்த்தனைகள் இருக்கிறது, அப்போது பலவிதமான காரியங்கள் சம்பவித்திருக்கிறது.

**Dr. டேரல் பாக்:** இந்த நிகழ்வுகள் எல்லாவற்றையும் நாம் அனுபவபூர்வமாக புரிந்துகொள்ள கலாச்சாரத்தின் சாராம்சமும் இறையியலின் மையப்பொருளும் நம்மிடம் இருக்கிறது. அதைதான் கடந்த வாரம் பார்த்தோம். நாம செய்தது என்னன்னா பல காரியங்கள் நடந்திருக்க வாய்ப்பாக இருந்த இந்த இடைவெளியை விளக்கி சொல்ல நினைத்தோம், நாம பேசிக்கொண்டிருக்கிற காரியத்தின் உட்கருத்தை பற்றி சொல்லுவதை பார்க்கும் போது ஒருவேளை மிகைபடுத்தப்பட்ட கட்டுக்கதை என்று தோன்ற வாய்ப்புள்ளது. ஆமா, சம்பவம் நடந்து பல வருடத்திற்கு பின்புதான் ஆதாரம் கிடைத்தது. ஆனா இந்த ஆதாரங்களை உறுதிசெய்வது எதுன்னா, இந்த ஆதாரங்களை பூரனப்படுத்துவது கலாச்சாரம் தான். அதோடு இந்த ஆதாரங்களில் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்கள், அதை அப்படியே பின்னால தள்ளி இடைவெளியை அடைத்திட முடியும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம், 30 வினாடிகளுக்கு இதை குறித்து நீங்கள் யோசித்து பார்க்க உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கிறோம், உங்களை மீண்டும் சந்திக்கிறோம். டேரல் நமக்கு எடுத்து சொன்ன வசனங்கள் எங்கிருக்கிறது என்பதை உங்களுக்கு காண்பிக்க விரும்புகிறேன், அவை எங்கிருந்து தோன்றின. இணைந்திருங்கள். மீண்டும் சந்திப்போம்.

****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. இன்றைக்கு நாம் பகிர்ந்துகொண்டிருக்கும் தகவல்கள் அனைத்தும் நான் கல்லூரிக்குள் நுழைவதற்கு முன்பு எனக்கு ஒருவர் சொல்லியிருக்கலாமே என்று தோன்றுகிறது, ஏன்னா ஒரு கல்லூரிக்குள் நுழையும் அந்தநாளை என்னால் உணரமுடியும், நஅந் சென்றது இலினோயிஸ் பல்கலைகழகம், நான் கிறிஸ்தவன் என்பதை அறிந்திருந்த பேராசிரியர் ஒருவர் இருந்தார், அவங்க என்னிடம் கேட்ட கேள்வி, “சரி, நீ எதுக்காக இதை நம்புகிறாய்?” நா இதுவரைக்கும் படிக்காத காரியங்களை சொல்லி எனக்கு விரோதமாக பேசிடுவார்கள்.

இதுல சில முக்கியமான காரியங்கள், இறையியலில் மாற்றம் உண்டாகுதா? இயேசு வாழ்ந்த காலத்திற்கு பிறகு கிறிஸ்தவர்கள் இதை ஏற்ப்படுத்தினார்களா, அவங்க புதிய இயேசுவை உருவாக்கினார்களா? அல்லது நான்காம் நூற்றாண்டின் சபை ஆலோசனை சங்கத்தினரால் இது எல்லாருடைய மனதிலும் பதிந்துவிட்ட விஷயமா? சரி, உள்ள வர்ற ஒரு இளைஞனுக்கும் இதை பற்றி தெரியாது. நான் போய் அதை பற்றி படித்து தெரிந்துகொள்ள வேண்டும். நீங்க உங்களுடைய மகன் அல்லது மகளை கல்லூரிக்குள் அனுப்பும்போது ஒருவேளை அவர்களுக்கு கிறிஸ்தவத்தின் துவக்கத்தை பற்றி தெரியாமல் இருந்தால், நாம் உறுதியான ஆதாரமாக கொண்டிருப்பவைகளுக்கு பின்னால் இருக்கும் சத்தியத்தை அவர்கள் அறிந்துகொள்ளாவிட்டால், கல்லூரிகளுக்குள் நுழையும் அவர்களுக்கு பெரிய பிரச்சனை காத்திருக்கிறது. அதனாலதான் கிறிஸ்தவ மாணவர்கள் சபையில் வளர்க்கப்பட்டவர்கள், பல்கலைகழகத்திற்குள் நுழைந்தவுடன் தங்கள் விசுவாசத்தை விட்டுவிடுகிறார்கள்.

இப்ப, உலக பிரசித்திபெற்ற வல்லுநரான டேரல், இந்த காரியங்களை நாம் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறார். இதுவரைக்கும் நாம இந்த இறையியலானது கிறிஸ்தவ விசுவாசத்தின் மையப்பொருளாக இருப்பது எப்படி புதிய ஏற்ப்பாட்டின் 27 புத்தகங்களில் மட்டும் காணப்படாமல், அப்போஸ்தலர்களின் சீஷர்களிடமும் ஆதி திருச்சபையின் பாதிரியார்கள் மூலமும் சொல்லப்பட்டதென்பதை பார்த்துக்கொண்டிருக்கிறோம். நீங்க எந்த பகுதியை எடுத்து பார்த்தாலும் அதில் இறையியலின் மையப்பொருள் தொடர்ந்து வருவதை பார்க்க முடியும். ஆனா இப்ப நா இந்த 27 புத்தகங்களுக்கு நேராக நடத்திட விரும்புகிறேன். எல்லாரும், நண்பர்கள் மற்றும் விரோதிகள், இயேசுவின் உபத்திரவத்தை அறிந்திருந்தனர். இதை பற்றி பல ஆவணங்களில் நாம் பார்க்கிறோம். பற்ற படங்களிலும் கூட இதைப்பற்றி நாம் பார்த்திருக்கிறோம். இயேசு உபத்திரவப்படும் பொது அவர் பிரதான ஆசாரியரால் வினாவப்படுகிறார், இது மாற்கு 14:61-62ல் இருக்கிறது, “நீர் தான் மேசியாவா? நீர்தான் கிறிஸ்துவாகிய மேசியாவா, தேவனுடைய குமாரனா, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவரா?” இயேசுவின் பதில், “நான்தான்”. தொடர்ந்து சொல்கிறார், மனுஷகுமாரன் சர்வவல்லவரின் வலதுபாரிசத்தில் வீற்றிருப்பதையும் வானத்தின் மேகங்கள்மேல் வருவதையும் நீங்கள் காண்பீர்கள் என்றார்.” அதற்கு அவர்கள், “ஓகே. இதுக்கு மேல என்ன வேண்டும்?” இது தேவதூஷணம், இவன் மரணத்துக்கு பாத்திரவான் என்றனர்.” சரி, இது எல்லாருக்கும் தெரிந்த பகுதிதான். இது இயேசுவை பற்றி என்ன சொல்லுகிறது?

**Dr. டேரல் பாக்:** சரி, இப்ப சிலுவையில் அறையப்படுதலில் இருந்து பார்க்கலாம், ஏன்னா சிலுவையில் அறியப்படுதல் என்ற சம்பவம், நீங்க நாத்திகனாக இல்லைன்னா,

வரலாற்றில் இது நடந்ததை ஒப்புக்கொள்வீர்கள். பெரும்பாலானோர் இயேசு பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையப்பட்டதாக ஒப்புக்கொள்கிறார்கள். இதை புதிய ஏற்ப்பாடு மட்டும் நமக்கு சொல்லவில்லை, ஆனால் ஜோசெபஸ் இதை ஆண்டிகுட்டீஸ் 18. 63-64ல் சொல்கிறார். டாசிடஸ் இதை ஆனுலஸ் 15. 44ல் சொல்கிறார், இந்த வேதத்திற்கு வெளியிலும் இதற்கான ஆதாரத்தை பார்க்க முடிகிறது.

தேசத்தின் நித்தனையாக சிலுவையில் அறியப்படுவார்கள். டைடலஸ் நற்செய்திகளில் சொல்லும்போது இயேசு தன்னை யூதர்களின் ராஜா என்று சொன்னதற்காக சிலுவையில் அறையப்பட்டார் என்றார். ராஜாக்களை பற்றி ரோமானியர்களிடையே ஒரு கருத்து இருந்தது, நாங்களே ராஜாவை ஏற்ப்படுத்துவோம், நீங்கள் அல்ல. அவர்கள் சட்ட ஒழுங்குகளை நம்பினார்கள், எங்க சட்டத்தை பின்பற்றுங்க இல்லைன்னா உங்களை தண்டிப்போம். சிலுவையில் அறையப்படுதல்ஒழுங்குகளை கடைபிடிக்க வேண்டும் என்பதற்காக இருந்தது. தேசத்தை நிந்தித்ததர்காக இயேசு சிலுவையில் அறையப்பட்டார்.

சரி, இந்த காரியங்களை நாம் பின்னிட்டு பார்க்கும்போது நாத்திகர்கள் ஒரு கேள்வியோடு முன்வந்திடுவார்கள் அது என்னன்னா, “இது உண்மையில் நடந்தது என்று நமக்கு எப்படி துல்லியமா தெரியும்? இயேசு மாத்திரம் தான் அங்கே இருந்தார்.” நினைவிருக்கட்டும், நாம் இருப்பது இயற்கையின் கண்ணோட்டத்தை உடைய உலகில், எனவே உயிர்த்தெழுந்த இயேசு அந்த பாடுகளின் போது தனக்கு நடந்தவைகளை அறிவித்திருப்பார் என்று அவர்களால் சிந்திக்க முடியாது. ஆனா அந்த பாடுகளின் போது நடந்ததை அறிந்துகொள்ள வழி இருக்கிறது. நிக்கொதேமு,அறிமத்தியனான யோசேப்பு, ஆலோசனை சங்கத்தில் நெருக்கமான நபர்கள். பவுல், சபைகளை துன்பப்படுத்துகிரவனாக இருந்தார், இயேசுவுக்கு விரோதமாக யூத ஆலோசனை சங்கத்தில் இருந்த எண்ணங்களை அறிந்திருந்தார், ஏன்னா அவரே அதற்கு துணையாக இருந்திருக்கிறார். அதோடு அன்னா வின் குடும்பம் இயேசுவின் குடும்பம் இடையேயான விவாதத்தை கேட்கக்கூடும். அன்னாவின் சந்தியார்தான் 60களில் நடந்த யாக்கோபின் மரணத்திற்கு பொறுப்பாளிகள். 30 ஆண்டுகளாக எருசலேமில் நடந்துவந்த குடும்ப பகை, 25000 லிருந்து 75000 பேர்வரை இருக்கும் அந்த பட்டணத்தில் ஆசாரியர்கள் சொவதற்கும் இந்த புதிய அமைப்புகளின் மத்தியிலும் யூதகுலம் எதை நோக்கி செல்கிறது என்ற உண்மையை யார் சொல்லுவார் என்ற விவாதம் நடந்துகொண்டிருந்தது.

இவை அனைத்தும் அந்த கட்டத்தில் என்ன நடந்தது என்பதையும் அதற்கு பிறகு நடந்த சம்பவங்களையும் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பத்தை அளிக்கிறது. அந்த விஷயம் என்ன தெரியுமா, “நான் மேசியா மட்டும் அல்ல, நானே மனுஷகுமாரன்.” சரி, மனுஷகுமாரன் எனபது மிக முக்கியமான புனைபெயர். நம்முடைய சுவிசேஷங்களில் எல்ல நிலைகளிலும் கலாச்சாரத்தோடு பொருந்தியிருக்கிறது. தத்ரூபமான நிலையை விளக்க இந்த முறையை பயன்படுத்துவது வழக்கம், அதைதான் பல சான்றொப்பம் என்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** 82 முறை சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு தம்மை குறித்து சொல்வதற்கு பயன்படுத்தியிருந்தார்.

**Dr. டேரல் பாக்:** இயேசுவும், விசித்திர விதமாக இதை உபயோகிக்கிறார், ஏன்னென்றால் இயேசு தன்னக்காக அதை பயன்படுத்தினார். ஆதி திருச்சபைகள் நிருபங்களில்

இயேசுவை குறிப்பிட பயன்படுத்தவில்லை. இயேசுவை அவர்கள் இப்படி குறிப்பிடவில்லை. இயேசுதான் தன்னைக்குறித்து இப்படியாக சொல்லுகிறார். இது தானியேல் 7ம் அதிகாரத்திற்கு கொண்டுசெல்கிறது. தானியேல் 7 அசாதாரணமான ஒரு பகுதி, ஏன்னா மனுஷகுமாரன் மாம்சமானவனாக இருந்தாலும் – மனுஷ குமாரன் என்றால் மனிதனுடைய மகன், தாவீதின் மகனை  தாவீதின் குமாரன் என்கிறோம், சார்லோட்டின் மகளை சார்லோட்டின் குமாரத்தி என்கிறோம் – ஆனால் இவர் மேகங்களின் மீது வருகிறார். பழைய ஏற்பாட்டில் தெய்வத்துவமுள்ளவர்கள் மட்டுமே மேகங்கள் மீது வருவார்கள். இங்க இந்த மனிதர் தேவன் செய்யும் செயல்களை செய்துகொண்டிருக்கிறார். அது மாத்திரமல்ல, அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடம்மட்டும் வந்தார் அவருக்கு கர்த்தத்துவமும் மகிமையும் ராஜாரீகமும் கொடுக்கப்பட்டது.

இயேசு தனக்கு பரலோகத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் உரிமை உள்ளதால், அதிகாரத்தை பகிர்ந்தளித்து, இரட்சிப்பிற்கு தேவையானதை செய்ய முடியும் என்கிறார். அவர்தான் எல்லாவற்றிலும் உரிமையுள்ள துணை பிரதிநிதி. அந்த கால யூத வழக்கத்தில், 2ம் ஆலயம் இருந்த யூதர்கள் காலம், தேவன் தனது மகிமையை ஒருவருக்கும் கொடுக்கவில்லை. அதனால தேவனுடைய மகிமையில் பங்குகொள்ள முடியும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. யூத தலைமைத்துவத்திடம் இந்த கண்ணோட்டம் இருந்ததால், இயேசு தூஷண வார்த்தைகளை சொல்கிறார் என்றனர். ஆனா அவர் என்ன சொன்னார் என்றால், “என்னிடம் செய்ய நினைத்தை நீங்கள் எனக்கு செய்யலாம். எண்ணெய் சிலுவையில் அறைந்து நீங்கள் கொலையும் செய்யலாம். ஆனால் தேவன் ஒருநாளில் என்னை நிருபித்து காட்டுவார். கலரை காலியான வுடனே, நான் உயிரோடிருக்கிறேன் ஒரு நாளில் உங்கள் நியாயாதிபதியாக நிற்ப்பேன் என்பதை அறிந்துகொள்ளுங்கள் என்றார்.

நீங்கள் என்னை தொடர்புகொள்ள விரும்பினால், நிச்சயம் என்னை தொடர்புகொள்ளுங்கள் www.righthandofGod.com

வேறுவிதமாக சொன்னால், தேவன் இந்த சர்ச்சைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திடுவார், இந்த சர்ச்சைக்கான ஒரே தீர்வு உயிர்த்தெழுதல் தான். இதைதான் அதிகாரத்தை கொண்டிருப்பது என்பதாகும். இயேசுவிடம் மீண்டும் கிடைத்த அதிகாரம் எனப்படுகிறது. இயேசு தனது ஊழியத்தின் மத்தியிலும் இந்த அதிகாரத்தை உடையவர் என்பதை பகிரங்கமாக பிரகடனித்தார். அவருடைய ஊழியத்தின் சாராம்சங்களை அவர் எடுத்து சொல்கிறார். சீஷர்கள் எதை விசுவாசித்தார்கள் என்பதை சொல்லுகிறது, இது எங்கிருந்து வந்தது என்பதற்கு ஒரு ஆதாரமாவது அவர்களிடம் இருந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. மனுஷகுமாரனுக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இருக்கிறதை என்பதை பயன்படுத்துகிறார்.

**Dr. டேரல் பாக்:** மாற்கு 2ல், ஆரம்பத்திலேயே, திமிர்வாதகாரனை குனமாக்கும்போது நீங்க பார்க்க முடியாத  ஒன்றை சொல்கிறார் – பாவத்திற்கான மன்னிப்பை நீங்கள் பார்க்க முடியாது – நீங்க பார்க்க முடிந்த காரியம் – திமிர்வாதம் குணமடைவது. திமிர்வாதக்காரன் எழுந்ததும் அவர் சொல்கிறார், “பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி

அவனை நோக்கி எழுந்து போ என்றார்." உடனே அவன் எழுந்து நடந்து போனது, மனுஷகுமாரனுக்கு பூமியிலே பாவத்தை மன்னிக்க அதிகாரம் உண்டென்கிறது," பாவங்களை மன்னிப்பது என்பது தேவன் மட்டுமே செய்யக்கூடிய காரியம். அதனால இங்க ஒரு தெய்வம் மனிதனாக சிலுவைக்கு செல்வது நடக்கிறது – இது ரொம்பவும் முக்கியமானது – சுருக்கமான நற்செய்திகளில் இருக்கிறது. சில நாத்திகர்கள் சுருக்கமான நற்செய்தி நூல்கள் யோவான் சுவிசேஷத்தில் இருப்பதுபோன்ற உயர்ந்த இறையியல் கருத்துகளை கொண்டிருப்பதில்லை என்கின்றனர். சரி, யோவான் சுவிசேஷம் மேலான இறையியல் கருத்துகளை வெளிப்படையாக எடுத்துரைக்கிறது. ஆனால் சுருக்கமான நற்செய்தி நூல்கள் இயேசு செய்ததை உள்ளார்ந்த அர்த்தத்தோடு கூறுகின்றன- அவர் தான் யார் என்பதை வெளிப்படுத்தினார், அவர் யார் என்பதை தனது கிரியைகள் மூலமாக எடுத்து சொன்னார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதனால் தான் யோவான் ஸ்நானகன் பற்றிய உவமை எனக்கு பிடிக்கும், "வருகிறவர் நீர்தானா அல்லது வேறொருவர் வர காத்திருக்க வேண்டுமா?" அதற்கு இயேசு சொல்லும் பதில் எல்லாவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

**Dr. டேரல் பாக்:** நிச்சயமாக. அவர் சொல்லும்போது, "குருடர் பார்க்கின்றனர், முடவர்கள் நடக்கின்றனர், தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது, மரித்தோர் உயிர்பெருகின்றனர் என்றார்." இரட்சிப்பின் காலம் வரும்போது தேவன் செய்யப்போகிற காரியங்களாக ஏசாயாவில் சொல்லப்பட்டிருக்கும் பகுதிதான் இது. மேலும் அவர், "நான் யார் என்பதை ஏன் கிரியைகளை கண்டு அறிவீர்கள் என்றார்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், டேரல், இயேசுவை பற்றிய உண்மைகளை பல விதங்களில் நிருபிக்கப்பட்டிருக்கிரத்தை அறிவோம், நாத்திகர்களும் ஒப்புக்கொண்டுள்ளனர், விசுவாசிகள், யூதர்கள், ரோமர்களுக்கும் தெரியும். பல கோணங்களில் இதற்கான ஆதாரங்களின் பதிவுகள் உங்களிடம் இருக்கிறது, அதை பார்த்தால் தெரியும். கேள்வி இதுதான், இத்தனை வருடங்களாக இந்த செய்தி எப்படி பரவினது? இதுதான் சம்பவிக்கும் என்று இயேசு முன்னறிந்த காரியம் என்ன, அவர் எதை முன்வைத்து சென்றார்?

**Dr. டேரல் பாக்:** சரி, இயேசு என்ன செய்கிறார் என்றால் தேவனுடைய திட்டத்தின் மையத்தில் தன்னை வைத்து தான் யார் என்று சொல்கிறார், அவர் தன்னை மேசியா என்று அறிக்கை செய்கிறார். அவர் தான் யார் என்று அறிக்கை செய்வது என்னவென்றால் தான்தான் தேவ இரட்சிப்பை அளிகும்படி அனுப்பப்பட்டவர் என்கிறார். தேவ செயல்களின் மையமாக இருக்கிறார். உயர்த்தப்படுதல் இவர் யார் என்பதை உங்களுக்கு எடுத்து சொல்கிறது. அதை தான் அவரும் எடுத்து சொல்ல விரும்பினார்.நாம் பார்த்துக்கொண்டிருப்பதும், நாம் பார்த்தவைகளும், சம்பவங்களுக்கும் ஆதாரங்களுக்கும் இடையே இருக்கும் இடைவெளியை சுருக்கி நம்மை அந்த சம்பவங்களின் நிகழ்விற்கே கொண்டு செல்கிறது, இயேசுவின் செயல்களையும், அதன்மூலம் வெளிப்படும் இறையியலின் செய்தியையும் விளக்கி கூறுவதாக இருக்கிறது. அதனால இந்த இடைவெளி புளுவதுமாக குறைந்துவிட்டது. அதோட இப்ப இந்த இடைவெளி சுத்தமா இல்லாமலேயே போய்விட்டது. அதனால கருத்துக்களை பகிர்ந்துகொள்ளும் விதத்திலும்

புரியவைக்கும் விதத்திலும் எந்தவித முன்னேற்றமும் இல்லை என்று அர்த்த இல்லை. ஆனா மைய கருத்தான இயேசுதான் இரட்சிப்பிற்கு ஒரே வழி அவர் மூலமாக இரட்சிப்பு உண்டாகும், இயேசு தன்னை குறித்து சொல்லும்போது இதை சொல்லியிருக்கிறார், அதைதான் சீஷர்கள் சாட்சியாக எடுத்துக்கொண்டார்கள். எனவே இறையியலில் போட்டிகள் கிடையாது. நம்மிடம் இருப்பது என்னவென்றால் இந்த இறையியலின் மையப்பொருள் பலதரப்பட்ட எழுத்தாளர்களின் பலவிதமான கருத்துகளின் வலியுறுத்தலாக இருக்கிறது, ஏனென்றால் அவர்கள் பலதரப்பட்ட கண்ணோட்டத்தை எடுத்துரைக்கின்றனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. ஆனா அவர்கள் இதை சாட்சிகளாக எடுத்துக்கொண்டத்தை நான் பாராட்டுகிறேன். அவர்கள் இதை பற்றிக்கொண்டது மாத்திரமல்ல, ஆனா இயேசுவும் அவர்களை வேறுபிரித்து கட்டளை கொடுத்தார், அவர் அப்போஸ்தலர்களுக்கு சொன்ன எல்லாவற்றையும் மற்றவர்களுக்கு சொல்லி அவர்களை சீஷர்களாக்கும்படியாக கூறினார்.

**Dr. டேரல் பாக்:** அப்போஸ்தலருடைய வேலையின் முக்கியத்துவத்தை பற்றி புரிந்து கொள்வது மிகவும் அவசியம், அது  மிகவும் விசேஷமான வேலை. அப்போஸ்தலர் ஒன்றாம் அதிகாரத்தில் யூதாசுக்கு பதிலாக ஒருவனை நியமிக்கும்போது, அதற்கான முதல் தகுதி ஆதியிலிருந்து இயேசுவோடு இருந்தவராக இருக்க வேண்டும். அவர் யார் என்பதை முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அவர் அவர்களை சாட்சிகளாக ஏற்படுத்தியபோது, இது மிகவும் நுட்பமான வார்த்தை. அவர் என்ன சொல்லுகிறார் என்றால், மற்றவர்களை போல நாம் சாட்சிகளாக இல்லை, புரியும்படி சொல்கிறேன். இந்த சாட்சிகளின் மேல்தான் நாம் நின்றுகொண்டிருகிறோம். இயேசு சொன்னதை செய்ததையும் நேரடியாக பார்த்த அனுபவத்தை உடையவர்கள் இவர்கள், பற்றி சொல்லும்படி வாழ்ந்தவர்கள். அப்போஸ்தலரில் சொல்லப்பட்டிருக்கும் சாட்சி இதுதான். அவர்களை தன்னிடமாக ஒன்று சேர்த்து அவருடைய ஊழியத்தின் மத்தியில் இயேசு அவர்களுக்கு போதித்து அவர்களை  ஆயத்தப்படுத்தியது இதற்காகத்தான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, அப்போஸ்தலரில் பெரும்பாலானோர் 65-67ல் மறித்தனர் யோவான், 95ல், சரி, 100களில் சாட்சியாக இருந்தவர்கள் என்று சொல்லக்கூடிய அப்போஸ்தலர் ஒருவரும் இல்லை.

**Dr. டேரல் பாக்:** ஆமா சரிதான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இந்த தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வந்தது.

**Dr. டேரல் பாக்:** புதிய ஏற்பாட்டை பற்றி சொல்லவேண்டுமென்றால் இந்த சாட்சிகளை உள்ளடிக்கிய களஞ்சியமாக இருக்கிறது. இதைதான் நாம் புதிய ஏற்பாட்டில் பார்க்கின்றோம். இவை அனைத்தும் இயேசுவோடு இருந்த ஆதிகால சந்ததியினரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள், இயேசுவோடு இருந்தவர்களிடமிருந்து வந்த செய்துகள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஒரு உறுதியான ஆதாரம். ஒன்றோடுஒன்று இணைத்திருக்கிறது, நாங்க எதைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதை

புரிந்துகொள்கிறீர்கள் என நம்புகிறேன். மேலும் தொடர்ந்து பேசிட இருக்கிறோம் அதில் எப்படி இந்த சாட்சிகள் பரிவினார்கள் என்பதோடு சீஷர்கள் அறிக்கைசெய்த அனைத்தையும் எப்படி பதிவு செய்தனர் என்றும் பார்த்திடுவோம். மேலும், அதோடு, வேதத்தை எப்படி பெற்றுக்கொண்டோம்? இந்த புத்தகங்கள் எப்படி தேர்வுசெய்யப்பட்டது? என்பதை மக்கள் அறிந்திட விரும்புகிறார்கள், அதாவது, இந்த புத்தகங்களை தேர்வு செய்தது யார், எதற்காக தெரிந்துகொண்டார்கள்? சிலருக்கு தோன்றும் கேள்வி, சரி, ஏன் மற்றவைகளை அவர்கள் நிராகரித்தனர்? நம்முடைய அடுத்த நிகழ்சிகளில் நாம் அதைதான் பார்க்க இருக்கிறோம். நீங்களும் அதில் இணைந்திடுவீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.